# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 159 — 1975 අප්‍රේල් 11 වැනි සිකුරාදා — 1975.04.11

159 ம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தாப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விபபத்திர அறிவித்தல்கள் .. .. | 375 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்புத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 377 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## கேள்விப்பத்திர் அறிவித்தல்கள்

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவினால் கேள்விப்பத்திரங்களுடன் வழங்கப்படும் கணியப்பட்டியலில் காட்டப்பட்டுள்ள உபயோகிக்கத்தகாத மோட்டார் வாகனங்கள் மோட்டார் மாற்றுறுப்புக்கள் ஆதியனவற்றை விற்பதற்கும் அகற்றுவதற்குமான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத்தலைவர் 1975.04.28 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்வார். 1975.04.28 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத்தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/- கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1975.04.24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
31.03.1975.

4-138—11.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 159

### முக்கிய அறிவித்தல்

**இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரகாரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
**அரசாங்க அழுத்தகர்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**கொழும்பு,**
**1973 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.**

### வெற்றுத் தார்ப்பீப்பாக்கள் வாங்குவதற்கும் எடுத்துச் செல்வதற்குமான கேள்விப்பத்திரங்கள்

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருஞ்சாலைகள் அமைச்சில் ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பின் கீழ் உள்ள சப்பிரகமுவ பிராந்திய அலுவலக கேள்விச் சபைத் தலைவர் அவர்களால் வெற்றுத் தார்ப்பீப்பாக்களை வாங்கவும் எடுத்துச் செல்லவும், இலங்கையர்களிடம் இருந்தும் இலங்கையர் ஸ்தாபனங்களிடம் இருந்தும், கீழ் குறிக்கப்பட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களுக்காக, தனித்தனியாக, கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்கள்

1. இரத்தினபுரி
2. பெல்மதுளை
3. பலாங்கொடை
4. கொடகவெல
5. எம்பிலிபிட்டிய
6. கலவான
7. தெகிஓவிற்ற
8. எட்டியாந்தோட்டை
9. கேகாலை
10. றம்புக்கனை.

2. கேள்விப்பத்திரங்கள் 6.5.1975 அன்று முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். நூறு ரூபா பணத்தை இவ்வலுவலகத்திலோ அல்லது இலங்கையில் உள்ள எந்தவொரு வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்திலோ அல்லது எந்தவொரு கச்சேரியிலோ கட்டுப் பணமாக கட்டி பெற்ற பற்றுச் சீட்டையும் உமது அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் சம்பந்தமாக பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்ட ஒரு சான்றிதழோ அல்லது இது சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய வேறு சான்றிதழையோ சமர்ப்பிக்குமிடத்து 5.5.1975 அன்று பிற்பகல் 2 மணிவரை கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் 6.5.1975 அன்று முற்பகல் 11.00 மணிக்கு இரத்தினபுரியில் உள்ள சப்பிரகமுவ பிராந்திய வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் சமயம் கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தோர் அவ்விடத்தில் சமுகமளிக்க முடியும்.

4. இவ் ஒப்பந்தங்கள் 31.12.1975 வரை நீடிக்கும். மேலதிக விபரங்களை இரத்தினபுரியில் உள்ள சப்பிரகமுவ பிராந்திய வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கே. செல்வராசா,
வேலைகள் பணிப்பாளர்,
சப்பிரகமுவ பிராந்தியம்.

வேலைகள் பணிப்பாளர் அலுவலகம்,
சப்பிரகமுவ பிராந்தியம்,
இரத்தினபுரி, 11.04.1975.

4-126—11.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 159

---

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு-5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர், 1975 ஏப்ரல் 30 ஆந் தேதி காலை 10.00 மணிவரை பின்வருவனவற்றிற்கான பிரத்தியேக பொறியிட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார்.

| வேலை விவரணம் | ஒப்பந்தக்காரர்களின் ஆகக் குறைந்த பதிவு செய்த பெறுமதி ரூபா |
|---|---|
| 1. நாகொடை, களுத்துறை—இடத்தை அகழ்தலும் மட்டமாக்கலும்—ஈசி/677 ... | 1,00,000.00 |
| 2. எம்பிலிப்பிட்டிச் சாலை—வீதிகளையும் காலைகளையும் பாவுதல்—ஈசி/579டி ... ... | 1,00,000.00 |

பிரதான சிவில் பொறியியலாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்பட வேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக் கொள்ளலாம். இவரது அலுவலகத்தில் வரைவுகளைப் பரிசோதிக்கலாம். ஒவ்வொரு வேலைகளுக்கும் எதிராக காட்டப்பட்ட பெறுமதிக்கான சிவில் பொறியியல் வேலைகளுக்கு இ. போ. ச. வில் அல்லது அரச திணைக்களங்களில் அல்லது அரச யர்க்கங்களில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்கள், தேவையான கேள்விப் பத்திரங்களை வழங்குவதற்காக 1975 ஏப்ரல் 29 ஆந் தேதி நண்பகல் 12 மணிக்கு அல்லது முன்னதாக 1-2 விடயங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 100 ரூபா வீதம் மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பத்திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டுக்களையும், 1-2 விடயங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 25 ரூபா வீதம் மீளளிக்கப்படமாட்டாத படிவக் கட்டணப் பற்றுச்சீட்டுக்களையும் பிரதான சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன் மூலம் கேள்வியிடத் தகவுடையவராவர். ஒப்பந்தக்காரர்கள் பரிசோதனைக்காக சான்றோலைகளைக் காட்ட வேண்டும். அத்தகைய சான்றோலைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே காசாக மாத்திரம் கேள்விப் பத்திரக் கட்டுப் பணம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் கட்டப்பட வேண்டும்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5.

4-208—11.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 159

---

### மகாவலி அபிவிருத்திச் சபை

மகாவலி கங்கைச் செய்திட்டம்

மூல நட்டுவ குளத்தை சீர்செய்தல் வேலைக்கான கேள்விப் பத்திரம்

வட மத்திய மாகாணத்தில் கலாவேவா இடதுக்கரை பிரதேசத்தில் மூல நட்டுவ குளத்தை சீர்செய்தற் பொருட்டு சிவில் எந்திரவியல் நிருமாண வேலைகளுக்கென அரசாங்க திணைக்களங்களில் அல்லது கூட்டுத்தாபனங்களில் 1,00,000 ரூபாவிற்கும் அதற்கு மேலும்மாக பதிவு செய்யப்பட்ட உள்ளூர் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விக்காரர்கள் நிருமாண வேலைகளில் தமக்கு இருக்கும் அனுபவம், தொடர்பாகவும் இத்தகைய வேலைகளுக்குத் தம்மிடம் தகுந்த பொறிச் சாதனம் இருப்பது பற்றியும் போதிய ஆதாரம் காட்டுதல் வேண்டும்.

கேள்விகள் மகாவலி அபிவிருத்திச் சபை இல. 11, பாலத்தை வீதி, கொழும்பு 5 என்னும் முகவரியில் உள்ள பிரதான எந்திரர் (நிருமாண வேலையும் முன்னேற்றமும்) இடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் அனுப்பப்படவேண்டும். இவ்வேலைகள் தொடர்பாக மேலும் விபரங்களைப் பெற்றுக் கொள்வதுடன் திட்டவமைப்புக்களையும் சோதனை செய்யலாம்.

கேள்விக்காரர்கள், மகாவலி அபிவிருத்திச் சபையின் பிரதான கணக்காளரிடம் ஒவ்வொரு வேலைக்கும் எழுபத்தைந்து ரூபா (75/-) செலுத்தி கேள்விச் சாதனங்களில் மூன்று பிரதிகளைக் கொள்வனவு செய்யலாம். கேள்விச் சாதனங்களை 1975 சித்திரை 15 ம் திகதியிலிருந்து 28 ம் திகதிவரை கொள்வனவு செய்யலாம். கேள்விப்பத்திரங்கள் ஏற்பதற்கான முடிவுத் தேதியும் காலமும் 1975 சித்திரை 29 ம் திகதி காலை 10.00 மணி ஆகும்.

ஆர். எஸ். குக்,
தலைவர்,
மகாவலி அபிவிருத்திச் சபை.

1975 பங்குனி 25 ம் திகதி.

4-198—11.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 159

---

### இலங்கைப் புகையிரதத் திணைக்களம்

கேள்விப் பத்திர அறிவித்தல்—உருக்குப் பொருட்கள்

3.1.75 ந் தேதி வெளியான 145 ம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிட்ட மேற்குறித்த உருக்குப் பொருட்களுக்கான கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் தேதி 5.5.76 முற்பகல் 11 மணிவரையும் நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விப் பத்திரங்கள் 30.4.75 பகல் 12.00 மணிவரையும் விநியோகிக்கப்படும்.

எம். சறீன்,
பொது முகாமையாளருக்காக.

4-225—11.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 159

### காணி அபிவிருத்தித் திணைக்களம்

**பதவியாவிலுள்ள சிறிபுர கிராம வைத்திய நிலையத்துக்கு மின்பொறி நிறுவுவதற்கும், வழங்குவதற்குமான கேள்விப் பத்திரம்**

மேற்குறிப்பிடப்பட்ட சேவைக்குரிய கேள்விப் பத்திரங்களை 1975.05.30 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக் கொள்வார். இருக்கும் சரக்கோ, அல்லது இறக்குமதி—அல்லது வரவிருக்கும் சரக்கை விநியோகிப்பதற்கு கேள்வியாளர்கள் குறிப்பிடலாம்.

2. கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 150 இவ்வலுவலகத்தில் செலுத்தப்பட்டு, அதற்குரிய பற்றுச் சீட்டை 1975 ஆம் ஆண்டு மே மாதம் 29 ந் திகதி நண்பகல் 12 மணிவரை கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். காணி அபிவிருத்தி அதிபரால் அனுமதிக்கப்படாத படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் கவனிக்கப்படமாட்டாது.

3. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "சிறிபுர வைத்தியசாலையில் மின்பொறி நிறுவுவதற்கும் வழங்குவதற்குமான கேள்விப் பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடைய முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் நிரந்தரமானவையும், மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

6. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

7. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது, தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

8. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1975.05.30 ந் திகதி முற்பகல் 11.15 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

9. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

10. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1975.04.01
CT/2/471

4–203 11 04 75 ந் திகதி வர்த்தமானி இல. 159

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

**அநுராதபுர நீதிமன்றம்—மரம், மரத்தாலான பொருட்கள் ஆகியவற்றினது ஏல விற்பனை**

அநுராதபுர மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, அரசுடைமையாக்கப்பட்ட, அல்லது உரிமைகோரப்படாத கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள் 1975 மே மாதம் 9 ம் திகதி பி. ப. 1 மணிக்கு அநுராதபுர மாவட்ட நீதிமன்ற முன்றலில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| வழக்கு இலக்கம் | | பொருட்களின் விபரம் |
|---|---|---|
| 1. பி. 313/73 | ... | புருத்தை மரக்குற்றி 15, பளு 1 |
| 2. எ. 260/73 | .. | புருத்தை மரக்குத்தி 16 |
| 3. எ. 136/73 | .. | புருத்தை மரக்குத்தி 1, இன்னும் இரண்டு மரக்குத்திகள் |
| 4. 26411 | .. | புருத்தை 18 மரக்குத்திகள் |
| 5. எ. 871/58 | .. | புருத்தை 19 மரக்குத்திகள் |
| 6. எ. 967/58 | .. | மாங்கு (பராளா) 6 இழிக்கப்பட்ட பலகை இரண்டு |
| 7. 35939 | .. | தேக்க மரக்குத்தி 3 |
| 8. 37189 | .. | பலகை 3 |
| 9. 37410 | ... | பலகை 20 |
| 10. எ. 2298/70 | .. | பளு மரக்குத்தி 6 |
| 11. 37177 | .. | பளுப்பலகை 10 |
| 12. 37179 | .. | பளுப்பலகைகள் பல |
| 13. 37957, 37954 | .. | புருத்த மரக்குத்தி 6 |
| 14. 38884 | .. | மாங்கு (பராளா) 45 |
| 15. 38311 | .. | புருத்தை மரக்குத்தி 3 |
| 16. எ. 270/71 | .. | தேக்க மரக்குத்தி 5 |
| 17. எ. 1152/69 | .. | புருத்தை மரக்குத்தி 4 |
| 18. 31847 | .. | இழிக்கப்பட்ட மரக்கட்டைகள் 16 |
| 19. எ. 1156/72 | .. | பளு மரக்கட்டைகள் 5, ஹலபரிப்ப 12 |
| 20. 44896 | .. | இழிக்கப்பட்ட மரக்கட்டைகள் 17, மாங்கு 2 |
| 21. 45229 | .. | மரக்குத்தி 2 |
| 22. எ. 487/74 | .. | தேக்க மரக்குத்தி 1, மாங்கு |
| 23. 58092 | .. | நான்கு பலகைகள் |
| 24. எ. 681/73 | .. | மேசையொன்று |
| 25. 53208 | .. | கதவுடன்கூடிய நிலையொன்று |
| 26. எ. 641/73 | .. | பழைய கதவு |
| 27. 37468 | .. | பழுதடைந்த "சோ" கேஸ் ஒன்று |
| 28. 38181 | .. | கதவுப்பலகை 3, நிலை 3, பழுதடைந்த அஸ்பெஸ்டோஸ் தகடு 25 |
| 29. | .. | "காம்" பலகையொன்று |
| 31. 32146 | .. | டியுப் மின் விளக்கொன்று, மடிந்த தகடு |
| 32. 46147 | .. | கதவில்லாத நிலையொன்று, கதவில்லாத யன்னல் |
| 33. பி. 18886/72 | .. | யன்னல் கண்ணாடிகள் |
| 34. 45255 | .. | நிலைக்கம்பு 3 |
| 35. 45114 | .. | பீலியுடன் கூடிய ~~அலுமினியம் தகடு 3~~, பீலியறுந்த 3 |
| 36. 57748 | .. | கதவு நிலையொன்று, யன்னல் ஒன்று |
| 37. 56044 | .. | கட்டில் |
| 38. 130/69 | .. | சிறிய "சோகேஸ்" ஒன்று |
| 39. பி. 346/73 | .. | இருப்புக்கம்பிகள் |
| 40. எ. 1275/72 | .. | விறகுக்காகப் பாவிக்கக்கூடிய மரக்குத்திகள் பல |
| 41. | .. | பல்வேறு இனக்கட்டிடப் பொருட்கள் |

(அ) ஏல விற்பனைக்கு முன்னர் பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் அநுராதபுர மாவட்ட நீதிமன்ற ரெஜிஸ்டாரின் அனுமதியுடன் விற்பனையாரம்பிக்க ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

(ஆ) பொருட்களை ஏலத்தில் வேண்டுவோர், உடனடியாகப் பணத்தைச் செலுத்திப் பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும்.

(இ) கொடுப்பனவுகள் காசோலையினுலன்றிப் பணத்தினுல் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

லெஸ்லி அபேசேகர,
மாவட்ட நீதிபதி, அநுராதபுரம்.

அநுராதபுர மாவட்ட நீதிமன்றம்,
1975 ம் ஆண்டு மார்ச்சு ஸ்ரீ 31 ந் உ.

4-210—11.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 159

### கல்வித் திணைக்களம்—காலி

### ஏல விற்பனை—அறிவித்தல்

கா/வித்தியாலோக்க மா. வித்தியாலயத்துக்குச் சுவீகரிக்கப்பட்டிருக்கும் காணியிலுள்ள உபயோகிக்க முடியாத வீடுகள் 1975 மே 02 ந் தேதி மு. ப. 10.00 மணிக்கு என்னால் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

2. ஒரு வாரகாலத்தினுள் பொருட்களையும், எஞ்சியுள்ளவற்றையும் அகற்றிவிட்டு அவ்விடத்தைச் சுத்தப்படுத்த வேண்டும்.

3. பணத்தை உடனே காலிக் கல்வித் திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டும்.

4. மேற்கொண்டும் விபரங்களை இத்திணைக்களத்தின் கட்டடப் பிரிவில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

டப்ளியு. டீ. பெர்நாந்து,
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
காலி.

கல்வித் திணைக்களம்,
காலி,
1975 மார்ச் 31.

4-131—11.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 159

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியாசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக் கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை—1975

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மாச்சு .. .. | வெள்ளி | 7.3.75 .. | 12 மதியம் | புதன் | 26.2.75 |
| | வெள்ளி | 14.3.75 .. | 12 மதியம் | புதன் | 5.3.75 |
| | வெள்ளி | 21.3.75 .. | 12 மதியம் | புதன் | 12.3.75 |
| | வியாழன் | 27.3.75 .. | 12 மதியம் | புதன் | 19.3.75 |
| ஏப்பிறல் .. .. | வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் | செவ்வாய் | 25.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் | புதன் | 2.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் | புதன் | 9.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் | புதன் | 16.4.75 |
| மே .. .. | வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் | புதன் | 23.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் | புதன் | 30.4.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் | புதன் | 7.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் | புதன் | 14.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் | புதன் | 21.5.75 |
| யூன் .. .. | வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் | புதன் | 28.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் | புதன் | 4.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் | புதன் | 11.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் | புதன் | 18.6.75 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு.
1975 ம் ஆடு சனவரி மீ 01 ந உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.